Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
STC NO.2/2023

**Depositions of PW- 4**

| | | | |
|---|---|---|---|
| Name | **திரு.முத்துக்குமார்** | Occupation | மெக்கானிக் |
| Father's name | முத்துராமலிங்கம் | Calling | |
| Village | மானகசேரி | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of March 2026.

11.03.2026

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது மானகசேரியில் குடியிருந்து வருகிறேன். நான் மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். கடந்த 2022 ம் ஆண்டு ஒரு நாள் மானகசேரியிலிருந்து திருவில்லிபுத்தூர் வந்துகொண்டிருந்தபோது மாயத்தேவன்பட்டி விலக்கில் விபத்து நடந்திருப்பதாக போலீசார் அங்கு நின்றுகொண்டிருந்தனர். அப்போது நானும் சுந்தர்ராஜ்ம் போலீசாரிடம் என்ன நடந்தது என்று கேட்டோம். அதன் பின்பு போலீசார் கையெழுத்து மட்டும் கேட்டார்கள் நாங்கள் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். **பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

கடந்த 07.08.2022 அன்று மதியம் 02.15 மணியளவில் நானும் சுந்தர்ராஜ் என்பவரும் இருசக்கர வாகனத்தில் மாயத்தேவன்பட்டி விலக்கு அருகே வந்துகொண்டிருந்தபோது கிருஷ்ணன்கோவில் காவல் வட்டகாவல் ஆய்வாளர் மல்லி காவல்நிலைய குற்ற எண்.76/2022 வழக்கின் விவரத்தை கூறி எங்களை அழைத்து எங்கள் முன்னிலையில் திருவில்லிபுத்தூர் டு சிவகாசி மெயின்ரோட்டில் மாயத்தேவன்பட்டி விலக்கு அருகில் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் தயார் செய்ததாகவும் அதில் நானும் சுந்தர்ராஜ் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்ததாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.